## தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் (Tamil Nadu Transmission Corporation) துவக்கி வைக்கப்படுவது குறித்த செய்தி குறிப்பு

மின்சார சட்டம், 2003ன் அடிப்படையில் தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்தை மறுசீரமைப்பு செய்வதற்கு கொள்கை ரீதியிலான ஒப்புதலை அரசு ஆணை நிலை எண் 114 எரிசக்தி துறை நாள் 08.10.2008ல் வழங்கியுள்ளது. அதன்படி தமிழ்நாடு மின்சார வாரியமானது கீழ்கண்ட மூன்று அரசு நிறுவனங்களாக பிரிக்கப்படும்.

1) தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனம் (TNEB )
2) தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் (Tamil Nadu Transmission Corporation )
3) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ( Tamil Nadu Generation and Distribution Corporation)

2 தமிழக முதல்வர் கொடுத்த வாக்குறுதியின்படி மூன்று நிறுவனங்களும் எக்காரணத்திற்காகவும் எந்த காலத்திலும் தனியார்மயமாக்கப்படமாட்டாது

3. தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஆகிய மூன்று நிறுவனம் தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் தலைமையிலேயே தொடர்ந்து இயங்கும்.

4. இந்த மூன்று நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள்/ அலுவலர்கள் எந்த நிறுவனத்தில் பணிபுரிய வேண்டும் என்ற தங்களது விருப்பத்தின் அடிப்படையில் மாற்றிக்கொள்ள வழிவகை செய்யப்படும்.

5. இந்த மூன்று நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் / அலுவலர்கள் இப்போது அடைந்துவரும் சலுகைகளை தொடர்ந்து பெறுவார்கள்.

6. தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் (Tamil Nadu Transmission Corporation) 15,06,2009 அன்று பதிவு செய்யப்பட்டது. இந்த மின் தொடரமைப்பு கழகத்திற்கு தற்போதைய தமிழ் நாடு மின்சார வாரியத் தலைவர் தலைவராக இருப்பார். மேலும் மேலாண்மை இயக்குநர், மூன்று இயக்குநர்கள் முறையே இயக்குநர் நிதி, இயக்குநர் தொடரமைப்பு திட்டம் மற்றும் இயக்குநர் இயக்குதல் அவர்களால் நிர்வகிக்கப்படும். மேலும், இயக்குநர் பகிர்மானம், இயக்குநர் உற்பத்தி ஆகியவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திலிருந்து பகுதி நேர இயக்குநர்களாக செயலாற்றுவார்கள். இதைத்தவிர செயலர்/எரிசக்தி துறை, செயலர்/ நிதித்துறை மற்றும் செயலர்/தொழில்துறை ஆகியவர்களும் பகுதி நேர இயக்குநர்களாக செயலாற்றுவார்கள்.

7. தமிழ்நாடு மின் தொடர் அமைப்பு கழகம் 66 கி.வோ. மற்றும் அதற்கு மேற்பட்ட துணை மின் நிலையம் மற்றும் கம்பிகள் கொண்ட மின் கூட்டமைப்பை நிறுவி இயக்கும் பணியை மேற்கொள்ளும். மேலும் தமிழ்நாடு மாநிலத்தில் மின் தொடரமைப்பு பணிகளுக்கு தேவையான திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள், மின் தொடரமைப்பு தொடர்பான பணிகள், மின் பளு அமைப்பு பணிகள் மற்றும் அட்டவணையிடுதல் ஆகியவை தமிழ்நாடு மின் தொடர் அமைப்பு கழகத்தால் நிர்வகிக்கப்படும்.

8. தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகமானது (Tamil Nadu Transmission Corporation) இன்றைய தினம், 14.12.2009 மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கிவைக்கப்படுகிறது.